74

மக்காக்கள் ஸ்துதி

ACL-THAL
00090

294:417
N12
146948

ஸ்ரீ

விச்வநாதர் துணை.

பக்தர்கள்ஸ்துதி

இது

பாலக்காடு வடக்கந்தறை அக்கிரகாரம்

வி. எஸ். வாலாம்பாள் அம்மாளால்

இயற்றப்பட்டு

பாலக்காடு கல்பாத்தி

வித்யாகல்பதரு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பரீதாபி ௵ மேஷ

1912

இதன்விலை அணா க

ஸ்ரீ

விஷ்ணுஸகாயம்.

பக்தர்கள் துதி

விருத்தம்

பாரளந்தார்பாதம் தன்னை பக்தியுடன் னுன்பணிந்தே
சீருடன்எந்தன்மீது தயவுநீர்செய்யவேணும், [ன்
பரிவுடன் பக்தாள் ஸ்துதியை பிரியமாகவே நான்பாட,
பார்வதிகுமாரா உன்பாதத்தை போற்றினேனே.

கணபதி துதி

நாதநாமக்கிரியை] [ஆதிதாளம்

கணநாயகாநீரும் துணையிருந்தென்னைகாரும்,
வேலவர்க்குமூத்தவரே வணங்கிறேன்உம்மைநானும்
வேகத்துடனேவந்து விக்நங்கள் தீருமய்யா (கண)
சங்கரகுமாரனே சகலபிழைகள் தீர்த்து
இம்மமாகவேவந்து இச்சையை நிறவேற்றும். (கண)
ஈரேழுலோகமெல்லாம் ஏகாந்தவேலவரும்
சுற்றிவருவதர்குள் கனிதன்னை வாங்கினீர் (கண)
அப்பமடையவிலும் அதிகமாயிநான்தருவேன்

சதுர்முகாளந்தன்மேலே தயவுநீர்செய்யவேணும்(கண)

சுப்பிரமணியர் துதி.

ராகம் பூரிகல்யாணி] ஆதிதாளம்.

வடிவேலனே வந்தருள்செய்வீரெ
வடிவேலனே.

வள்ளிமணவாளா வானர்போற்றும் சூரா,
வணங்கிநின்றபேருக்கு வரம்கொடுக்கும்நாதா (வடி
பழனிமலைதன்னில் வாழும் வேலாயுதா
என் பாபங்களை போக்கி பாரும்கடைக்கண்ணால்(வடி
பரமேச்வரார்க்கு பிறியகுமாரனே பக்தர்களை
காக்கும் பாலசுப்பிறமண்யா (வடிவேலனே)
அடியார்கள் மீதில் அன்புள்ளநேசனே
ஆனந்தமாயிவந்து அடியேனை காரும்(வடி)
ஷண்முகனேயுந்தன் சரணாரவிந்தத்தில்
சீக்கிரமாயென்னை சேர்த்துகொள்ளும்நாதா(வடி)

சரஸ்வதிதுதி.

ராகம் பூரிகல்யாணி] [ஆதிதாளம்]

சரஸ்வதியே சர்வலோகமாயே சரஸ்வதியே

பக்தியுடனே உன் பாதத்தை பணிந்தேன்
அன்புடனேவந்து துன்பம் தீர்த்தருள்வாய்.(சர)
பிரமதேவருக்கு பிரியமுள்ளதாயே
நாவில் வந்திருந்து நல்லபுத்திதாரும் (சர)
மாதாவெ என்னுடைய மநதில்வந்திருந்து
குற்றங்கள் உண்டானால் கொம்பனமெ தீரும் (சர)
பக்தர்கள் துதியை பிரியமுடனேபாட
பங்கஜாக்ஷிவந்து பார்த்தருள்வாயம்மா(சர)

பார்வதிதுதி.

நாதநாமகிறியை] [ஆதிதாளம்].

பார்வதி எந்தன்முன்னே வாராய்,
பிறியத்துடனெவரம் தாராய் (பார்வதி)
பக்தியுடனெ நானும் உந்தன்பாதம்மிகபணிந்தேன்
சித்தமிறங்கி நீயும் (பார்வதி)
உலகங்களுக்கெல்லாம் உற்றதாய் நீயல்லவோ
மெத்தமனம்மகிழ்ந்து (பார்வதி)
புட்டுக்கு மண்சுமந்து பிரம்பாலடிபட்டோரை
பாணிக்ரகணஞ்செய்த (பார்வதி)
கெங்கையை மடியில்வைத்து சிவ சங்கரனிருக்கும்

போது, சலிப்புடனேயிருந்த (பார்வதி)
வாசுகி விஷமெடுத்து பரமேஸ்வரர்புஜிக்கும்போது
வந்துபிடித்துக்கொண்டு. (பார்வதி)
ஸ்ரீ தேவி உம்முடைய சீர்மலர் பாதங்களில்
சேர்த்துக்கொள்ளுவாய் அம்மா (பார்வதி

அம்மன் துதி.

இந்துஸ்தானி காப்பிராகம்] [ஆதிதாளம்

சங்கரி தாயெ தயவுசெய்வாய்நீயெ
சகலஜனங்களுக்கும் சர்வலோகமாதாவெ (சங்க)
பக்தாளைரக்ஷிக்கின்ற பரப்பிர்ம சொரூபியே
பாரில் உந்தனைப்போல பார்த்ததில்லை என்னம்பாள்(ச)
பராசக்தியே உன்னுட பாதமலர் போற்றினேன்
பஞ்சாட்சரியே அம்ப பரிபூர்ணநாயகியே, (சங்கரி
தேவிஜகதாம்பிகே செந்தாமரைபோலொத்த
பாத கமலம்தன்னில் பணிந்துநமஸ்கரித்தேன் (சங்கரி
மகிஷாசுரமர்த்தனி மாதவர்சோதரியே .
மந்தகாசமுகாரவிந்தத்தை நம்புகின்றேன் (சங்கரி.

பாலாம்பிகைதுதி.

காணடா.........ஆதிதாளம்

பாலாம்பிகே பரமகல்யாணி
பக்தர்கள்ரட்சகி பரப்பிரம்மரூபி (பாலாம்)
காருண்ணிய கடாக்ஷி கமலநாயகி
கருணைசெய்தென்னை கடைக்கண்ணால் பார்ப்பாய்(பா
ஏழையர்கள்மீதில் இஷ்டமுள்ள தாயே
பக்தர்களெக்கார்க்கும் பரமேஸ்வரியே (பாலாம்பி
லெளிதயின்னிடத்தில் லீலைசெய்தவளே
நித்தியம் நினைந்தோர்க்கு முக்திதி குடுப்பாயே(பாலா)
பார்தன்னில் விளங்கும்பாலே கௌமாரகி
வுன்பாதம் பணிந்தோர்க்கு பலவரம்கொடுப்பாய்(பால)

கண்ணிகள்

காபிராகம்... ... ... ஆதிதாளம்.

ஆலிலைமேல்பள்ளிகொண் டவர்நாமத்தை
அன்புடன் நான்பாட
பார்வதிதன் னுடைய பாலகுமாரனே
பார்த்தருள்செய்யவேணும்,
ஆதிசேஷன்மீதில் அழகுடன்நித்திரைசெய்து
ஆனந்தலீலைகள்பாட.

வாணீஸரஸ்வதியே வாக்கிலேவந்தெனக்கு
வரந்தரவேணுமம்மா,
ஜோதிர்மயமாக ஜகம்தன்னிலேவிளங்கும்
சர்வேசா உம்மைநம்பினேன்,
சத்துருசங்காரஞ்செய்யும் ஜெகத்பதேஉந்தனை
சாஷ்டாங்கமாய் பணிந்தேன்,
ஆதிகளைப்போக்கும் அற்புதனே உம்மை
அனுதினம் நான் மறவேன்,
அம்புஜநயனா நீர் இன்பத்துடனேவந்து
அனுக்கிரகம்செய்வீரய்யா,
நானுஜீவிகளுடைய ஹிருதயந்தன்னில்வசி
க்கும் நவநீதசோராஹரே.
நலமுடனேநீரும் நல்லபுத்தியைதந்து
நாதனே காப்பீரிப்போ.

பல்லவி

நாதநாமக்கிரியை] ஆதிதாளம்.

பஜிப்பதெப்போது மனமே கிருஷ்ணனபாதத்தை ; (ப)
அற்பசுகத்தை நினைந்து அரியேஉம்மைமறந்து
ஆசாபாசத்தில் அமைந்துகொண்டிருந்தால்[ப

சம்சாரம்ஆகுற சமுத்ரத்திலேமுங்கி
சந்தோஷமில்லாமல் சலிப்புடன் இருந்தால் (பஜி
தனதான்னியசொத்துக்களை தர்ம்மம்செய்யாமலிந்த
சரீரத்தைவைத்திருந்த ஜென்மத்தைகழித்தால்(பஜி
எமதூதர்கள் வந்து இழுக்கும்தேகத்தின்மேலே
இன்பமாகவேனாலும் இஷ்டம்வைத்திருந்தால்(பஜி)
மேல்வரும் விதிகளை இன்னதென்றறியாமல்
இந்த ஈனசுகத்தின்மேலே இச்சைவைத்திருந்தால்(பஜி)
நித்தியானந்தரை நினையாமலேயிருந்த
நிசித்தமாகுற இந்த நிலயில்லானிருந்தால்(பஜி
பாசக்கயற்றைப்போட்டு பற்றியிழுக்கும்போது
பிரபஞ்சத்தில் உள்ளதெல்லாம் நினைந்துக்கொண்டழு
பங்கஜாதரோடு பக்குவங்கள் சொல்லாமல் [தால்(பஜி
பாசவலயில்பெட்டு ப்ரம்மயுடனிருந்தால் (பஜி
ஸ்ரீதரகேசவன் திருவடிசேராமல்
தேசதேசங்கள்தோறும் திரிஞ்சுகொண்டிருந்தால்(பஜி)

கண்ணிகள்

தோடிராகம்] [ரூபகதாளம்]

அய்யனே எனக்காதாரமான அச்சுதானந்தகோவிந்தா

ஆபத்துக்கும்மைகூப்பிடும்போது அடியாள்மேல்
தயவில்லயோ
அரியேஉந்தனைமறந்து நானிப்போ ஆசையில்மோ
சம்போனேனே.
அண்டபுவனமெங்கும்தேடியும் ஆனந்தா உம்மை
காணேனே
பக்தவத்ஸலாபாபநாசனு பார்பொகிழும்நடருசனே
பாபகர்ம்மத்தைத்தீர்த்துமே உந்தன்பாதத்திலென்னை
சேருமே
பத்மநாபனே பரஞ்சோதியே பார்த்தசாரத்தியம்
செய்தோரே
உந்தன்பாதபத்மத்தை நம்பியேநானும்
பார்தன்னிலே வசிக்கின்றேன்
நாருயணனே நரஸிம்ஹனே நாஜுஜாதிக்கும்
ஈசனே தேவர்கள்போற்றும்
சீர்பாதம்தன்னில் சீக்கிறம்நானும்
சேர்வேனோஸ்ரீதரா
எந்தன் சித்தத்தில்வந்து மெத்தகவலைகள்
தீர்த்துமேகிருஷ்ணகேசவா விஷ்ணுபாதாரவிந்த
த்தில் என்னைச்சேருமே

உருக்குமணீசனே உக்கிரசீலனே சத்தியபாமை
லோலனே ஸச்சிதானந்த ஜனார்த்தனா
என் சங்கடமெல்லாம் தீருமே
திக்குவேறில்லைநாதா உந்தனை முக்கியமாக
நம்பினேன்

தீனரெட்சகா தேவிநாயகா திவ்யமங்களரூபனே
தநதைதாய்குருதெய்வமும் நீரே தஞ்சமென்றும்
மைநம்பினேன் சத்துருபாதயில் அகப்படாமலே
தீனபெந்தோ நீர்காருமே
கோதண்டதீக்ஷா குஞ்சிதபாதா
கோபியர்க்கெல்லாம் நேசனே
கோகுலந்தன்னில் கோக்களைமேய்த்த
கோபாலனே வந்து காருமே
மாதவாமதுசூதனா உந்தன்மகிமை
ஒன்றும்அறியேனே
வக்ஷஸ்தலத்தில் மாயயைவைத்து
காப்பாற்றும்போல் என்னைக்காரும்

கண்ணிகள்.

முகாரி ராகம்.............ஆதிதாளம

பாரளந்தாரோடு பாதகமலந்தன்னில்

பணிந்திருப்பதும் நானெப்போ
சீருடன் எந்தனை தெயவுசெய்துநீரும்
சீக்கிறம் அழைப்பதும் எப்போ
அய்யனேஉம்முடைய அழகானபாதத்தில்
அர்ச்சித்திருப்பதும்நான் எப்போ
கண்ணனேயெந்தன்மேல் கருணைபுரிந்துஇந்த
காலத்தைப்போக்குவதும் எப்போ
காயத்தைபோக்கி என்கண்குளிரஉம்மை
காண்பதும்இனிநான் எப்போ
காலபாசங்களை கடந்துகரையேற
காலம்வருவதினி எப்போ
சம்சாரமாகுற சாகரக்கடலைநான்
தாண்டிவருவதும் எப்போ
பிரம்மமேஉம்முடைய பூமலர்அடிகளை
பஜித்திருப்பதும் நானெப்போ
நந்தமுகுந்தாவுந்தன் விந்தகளைச்சொல்லி
நடனம்ஆடுவதும் எப்போ
கர்த்தனே உந்தனை கண்டுகளித்துபரம்
ஆனந்தம்அடைவதும் எப்போ
சங்குசக்ரம்தரிக்கும் ஸ்ரீதரனேஉந்தன்

சாயூச்சியம்கிடைப்பதும் எப்போ
சங்கடமில்லாமலே சந்தோஷமாய் உம்மை
சரணமடைவதும் நானெப்போ
பொய்யானவாழ்வுதன்னை மெய்யென்றுஎண்ணாமலே
பூரித்திருப்பதும் நானெப்போ
உலகமாதாவைப்போலே உந்தன் அண்டையில்வந்து
உகந்திருப்பதும் நானெப்போ
கங்கணங்கள் தரிக்கும் கருணைகடாக்ஷாஎந்தன்
கவலையை தீர்ப்பதும் நீரெப்போ
பங்கஜரூபா உம்மை பார்த்து மனம்மகிழ்ந்து
பக்கத்தில் இருப்பதும் நானெப்போ

பல்லவி

காம்போதரி] ஆதிதாளம்

கிருஷ்ண கேசவாஉன்பாதத்தை பணிந்தேன்
சித்தமிரங்கிநீர் சீக்கிரமாய்காரும் (கி)
உன்னைநம்பினேன்நான் பன்னகாசயனு
எந்தன்மேலெஇன்னம் இன்பமும்வல்லயோ (கி)
ஏழையர்கள்மீதில் இரங்குமீசாநீரும்
இத்தனை நேரமாய் ஏனின்னும்வல்லயோ(கி
காருண்ணியகடாக்ஷா கஞ்சதாளநேத்றா

கடைக்கண்ணாலெபார்த்து காத்துக்கொள்ளும் (கி)
சத்தியசொரூபா சல்க்குணசஹிதா [நாதா]
சந்தோஷமாய்வந்து தாஸனைக்கவேணும் (கி).

பல்லவி

சங்கராபரணம்] [திருபடதாளம்
ஜன்மமும்போருமய்யனே ஜகந்தன்னிலெ இருந்ததும்
போருமெனக்கு(ஜென்ம)
எத்தனையோகோடி ஜன்மம்எடுத்தேன்கணக்கில்லாமல்
இனிமேலாகிலும் எந்தன்மேலேதயவு
செய்யவேணுமே (ஜென்ம)
பாசபெந்தம் தன்னிலிருந்து பரதவித்ததும்போதும்
பன்னகசயனை என்னை உன்பாதத்திலேசேர்த்துக்
கொள்ளும் (ஜென்ம)

ஆலிலைமேல் பள்ளிகொண்ட அச்சுதாஉம்மைபணி
ந்தேன், அஞ்ஞானத்தைபோக்கிநீரும் உன்னடி
மலரில்சேருமென்னை (ஜென்ம)
நீலமேகசியாமளனே நிர்க்குணபரிபூரணனே
நிர்ம்மலமான ரூபத்தைநான் ஸ்மரிக்கும்படிக்கி
னினைவைதாரும் (ஜென்ம)

பல்லவி

ஆரபிராகம்........ஆதிதாளம்.

இன்னம்வரக்காணேனடி ஏழுயர்மீதில்இரங்கும்
ஈசன் ஜெகன்னாதன் பொற்பாதத்தைசீக்கிரம்
நான்காண்பேனோ (இன்னம்)
சந்திரமண்டலம்போல் முகத்தழகும்
மன்மதன்வில்லொத்த புருவங்களும் கனகமயமாயி
ருக்கும் கண்ணனை நான்காண்பேனோ (இன்னம்)
கிரீடமும் குண்டலமும் கேசவனாரோடு கண்ணழகும்
கௌஸ்துவாபரணம் அணிந்திருக்கும் கெருட
வாகனரை காண்பேனோ (இன்னம்)
விஸ்தாரமானதோர் நெத்திதன்னில் கஸ்தூரி திலக
பொட்டழகும் எள்ளுபூபோலொத்த நாசிகயுள்ள
ஈஸ்வரனைநான் காண்பேனோ (இன்னம்)
கோவப்பழம்போல் உதடழகும்
மாணிக்சம்போலொத்த தந்தங்களும்
ஜோதிர்மயம்ஆயிவிளங்கும்சுந்திரரைநான்காண்
பேனோ (இன்னம்)
சங்கம்போலொத்தகழுத்தழகும் சங்கயுஇருக்கும்மார
ழகும் வனமாலைஅணிந்திருக்கும் வாமதேவரை நான்
காண்பேனோ (இன்னம்)

கங்கணமும் தோள்வளையும் கைதன்னில்சங்குசக்கி
ரகெதைஅழகும் சாரங்கத்துடன் விளங்குகின்ற சச்சி
தானந்தரைகாண்பேனோ (இன்னம்)
அண்டமெல்லாம்புசித்ததொரு ஆனந்தமானவயறழகும்
பருத்ததொருஇடைகள்உள்ள பிர்ந்தாலோலரை
காண்பேனோ (இன்னம்)
விலைமதியாதபீதாம்பரமும் பகுவிதமாயிதரித்திருக்கும்
வேணுகானம்பண்ணுகின்ற விஜயகோபாலரை
காண்பேனோ (இன்னம்)
இளவாழைத்தண்டுபோல் இந்திரஜாலனுடைஇரு
துடையும் முத்துபோல்முழங்கா லுடையமுகுந்தரை
நான்காண்பேனோ (இன்னம்
தண்டைசிலம்புகள் அணிந்திருக்கும் தாமரைபோ
லொத்தபாதங்களும் சர்வகாலங்களிலும் சந்தோஷ
த்துடன்வசிப்பேனோ (இன்னம்

பல்லவி

முகாரிராகம் ஆதிதாளம்

கிருஷ்ணாதெயவுவல்லயோ எந்தென்மேலின்னம்
கிருஷ்ணாதெயவுவல்லேயோ கிருஷ்ணதெயவுவல்லே
யோ கிருபைஉமக்கில்லையோ மனதும்இரங்கல

யொ மங்கயர்மணவாளரெ கிருஷ்ண
உந்தனுடன்பாதத்தைநான் இம்பமாகவெநம்பினேன்
எந்தன்மேலெகிருபைசெய்து தும்பங்களைத்தீருமய்யா
கிருஷ்ண

பாரளந்தமாயவரே பஞ்சவர்க்கதிபதியே வஞ்சமி
ல்லாபாஞ்சாலிக்கு மானம்தந்தேன் காத்தவரே
ஆரண்யம்தன்னிலேவந்து அபயமதுகொடுத்து கோ
வர்த்தனத்தைஎடுத்துகுடையாகபிடித்துநின்ற(கிருஷ்ண
காளியந்தசர்ப்பத்தை நீர்காலெடுத்து தானமர்த்திக
ண்டபேரெல்லாம்நடுங்ககாளியாநர்த்தனம்செய்த(கிருஷ்)
மல்ச்யாவதாரரேடிவானர்க்கனுகூலரெடிவஞ்சர்க
ளை சம்கரித்துவைகுண்டத்தில் வசிக்கின்ற(கிருஷ்ண
கூர்ம்மாவதாரரேடி கோதண்டபாணியேடி கோடி
லச்சம்பசுக்களை குதிச்சுகுடிச்சுநின்ற (கிரு
பாதாளத்திலேஅமர்ந்தபூமியென் எடுத்துக்கொண்டு
வரும்வழித்தன்னிலந்தவஞ்சகாசுரனைக்கொன்ற(கிருஷ்ண
ஈரேழுலோகம்நடுங்க ஹிரண்யனைமார்பிளந்துபக்தன்
பிரகலாதருக்கு நித்யமுக்திகொடுத்ததோர்(கிருஷ்)
வாமனவதாரம்கொண்டுமஹாவெலி அண்டயில்வந்
துமூன்றடிமண்வேணமென்று முடியின்மேலெகா

ஊிவைத்த (கிருஷ்)

பரசுராமராகவந்து மாதாசிரசையறுத்துபூமியெல்லாம்
தானம்பண்ணிபூலோகத்தில்வசிக்கின்ற (கிரு
தசரதராஜருக்கு சீக்கிரத்தில்அவதரித்து அகலிக்குமோ
க்ஷமது அம்புடனேதான்கொடுத்த (கிரு)
வீரபலராமரும் வேகமாயிஓடிமந்து வானரங்களைவதை
த்தபலராமகிருஷ்ணனெடி (கிருஷ்
கிருஷ்ணவதாரம்கொண்டு த்வாபரயுகத்தில்வந்து வ
சுதேவர் தேவகிக்கிமைந்தாராயிவந்தவதரித்த (கிரு
நந்தர்மனையிலேவந்து நாகரீகமாயிவளந்து உறியில்ச்சட்
டிதாணுடைத்தா ஒரலுடனேகட்டுப்பட்ட (கிரு)
காஷாம்புமேனியரேயசோதை பாலகரே கார்ம்மேக ரூப
மெடுத்துகம்சவதம்சைய்துநின்ற (கிரு
த்வாபரயுகத்திலவர்சந்தோஷமாகவந்துபார்த்தனுக்குசா
ரதியாய்பரிவுடனெதானிருந்த (கிருஷ்
கல்காவதாரரேடி கஞ்தாளநேத்திரரேடி பத்தவதாரம்
எடுத்துபக்தர்களைகாத்துநின்ற (கிரு)

பல்லவி

புன்னுகவராளி திருபட சாப்ப

இன்னம்பராமுகமோ என்னைஅழைக்க ஏனின்னம்

தாமசமோ இன்னம்
மந்தஹாஸமாயி உந்தன் மகிமைகளைச்சொல்லாமல் ம
ந்தபுத்தியாயினுனும்மதிமோசம்போனேனே, 'இன்னம்
சிரசில்தரித்திருக்கும் சிந்தாமணிகிரீடத்தைநான்
கேட்டேனே கஞ்சதாளாஎன்னைகடக்கண்ணால்பா
ராவிட்டால் காலபாசத்தைநீக்கிகடைத்தேறமா
ட்டுவேனே இன்னம்
தனம்வேணமென்றேனே இல்லாவிட்டால்நீர்தரித்த பூ
ஷணம்கேட்டேனே என்னகாரணத்தினல் ஏழைமேல்
இரங்காமல் இந்தப்படிநீரும் இருக்கலாமொ ஈசா ' (இன்
கண்டத்திலணிந்திருக்கும் கிருஷ்ணஉந்தன்கனகமா
லையைகேட்டேனே கண்ணீரெந்தன்மேலெ கருணை
புரியாதிருந்தால் கர்ம்மங்களை துலைத்துகரையேறிவ
ருவேனே (இன்னம்)

கீர்த்தனம்

காம்போதிராகம்] த்ருபட சாப்பதாளம்]
ஜகதாம்பாள்பாதத்தைசிந்தயில்நினைந்தோர்க்கு சன்மஸா
பல்யமாகுமே (ஜக)
அன்புடனெ அம்மன் அழகுதன்னை சொல்ல ஆதிசேஷ
னலும் ஆகுமோ என்தாயெ (ஜக)
காமேச்வாருடனெ கல்யாணமண்டபத்தில் களிப்புட

னெயிருந்தாள் கல்யாணசுந்தரியும் (ஜக)
முத்துரத்நபூஷணம் பகுவிதமாய் தரித்து ஜகதீசர்வாம
பாகம்சேர்ந்துஇருந்தாளம்மன் (ஜக)
தேவர்முனிவருடன் ஸ்ரீமகாவிஷ்ணுவந்து ஜகதாம்பா
ளைஎடுத்து சீக்கிரம்தாரைவார்த்தார் (ஜக
காமேச்வரர்தாரைவாங்கி அம்பிகைதன்கழுத்தில்திரு
மங்கல்யம்எடுத்துதரித்தார் மனம்மகிழ (ஜக)

ஊஞ்சல்

[சங்காபரணம்]

அக்ஞான அகங்காரத்தில் பந்தல்போட்டு
சுகதுக்கரண்டேன்இருகால்கள்நாட்டி
வேதாந்தசாரம்தன்னைவிட்டம்போட்டு
நால்வேதசாத்திரங்களைகயறாயிபூட்டி
அண்டபுவனங்களெல்லாம்பலகைசேர்த்து
மனச்சுபுத்திஎன்றபக்ஷிஊஞ்சலாட
தர்ம்மார்த்தகாமங்களைதட்டதாக்கி
கர்ம்மேந்திரியங்களிருகெண்டியாக
ஸப்தரஜஸ்தமோகுணங்கள்தீபமாக
பஞ்சமாபூதமைய்ந்து பெண்களாக
பிராணவாயுக்களெல்லாம்சுற்றிநிற்க
ஜீவாத்மாபரமாத்மா ஆடிஊஞ்சல்

சித்தர்களும்சாரணரும்சேர்ந்துநில்க்க
தும்புருநாரதரும்கீதம்பாட
பதினெட்டுவாத்தியங்களும்பாங்காய்போட
தேவதாஸ்திரீகள் வந்துநாட்யமாட
ஆகாசத்தில் அமராள்புஷ்பம்தூக
அத்வைதம்ரண்டுமொருஊசலாட
ருக்மணிசத்யபாமா இருபுறவும்ஆட
நடராஜர் நடுவில்இருந்தசஞ்ச ஆட.

பத்தியம்

[ஆநந்தபைரவி]

சித்தசொரூபியே ஸ்ரீபுவனேஸ்வரீ
ஜெகமெங்கும் விளங்கின்ற ஜோதிமயமே
மும்மூர்த்திதேவர்களும் ப்ரபஞ்சசிருஷ்டிசெய்யவே
மோகாம்பிகே உன்பாதம் சரணம்அடைவாள்
ஆத்மசொரூபியே அகிலாண்டரெக்ஷகியே
உன்னடிமலர்போற்றினேன் அம்பாசரணம்
சிந்தாமணிரெத்நத்தை சிரசில் தரித்துநீயும்
ஸ்ரீபுரத்தில் வசிக்கின்ற சிவசுந்தரியே
சண்டமுண்டாளேயும் சந்தோஷமாய்வதைத்த
சங்கரியேஉந்தனுக்கு சரணமம்மா (முடுக்து
பார்க்கடலில்வந்துதித்த பரமேச்வரியே

பக்தர்களை அனுக்கிரகிக்கும் புவனேச்வரியே
திக்குசயம்செய்கின்ற திரிபுரசுந்தரியே
மணிதீபில்விளங்கின்ற மந்தஹாஸவடிவே

பத்தியம்

[ஆனந்தபைரவி]

வைகுண்டம்தன்னில்வாழும் வரதகோபாலனே
வீராதிவீரனே விஜயநாதா
கோபிமார்தன்னுடைய சேலயெல்லா
மெடுத்துகொண்டுபோயி தானொளித்தகோத
தண்டனே
சிசுபாலனுடைசிரசை அரக்ஷணத்திலெ அறுத்து
ருக்மணியைமணம்புரிந்த உக்கிரசிங்கனே
நந்தகோகுலத்திலெ சிசுவாயிருக்கும்போது
பூதனயைமார்பிளந்த வீரபத்திரனே
யமுனாநதிதன்னிலே மத்சியாவதாரமெடுத்து
வேதங்களைஎடுத்துவந்த வேணுகோபனே
ஏழைகுசேலர்கிட்டெ இருந்த அவிலெஉண்டு
இம்பமோக்ஷம்குடுத்த இந்திரஜாலனே
தூணைரண்டாகபிளந்த நரசிம்ஹரூபம்கொண்டு
பிரக்லாதனைரக்ஷித்த பிர்ம்மமயமே (முடுக்கு-
இத்தனையும்சொல்லினுன் இம்பத்தோடே

மந்தஹாஸத்துடன் வருகின்றாரோ
த்வாரகைதன்னிலே தானிருக்கின்றாரோ
அங்குமிங்குந்தேடி அலைந்துனான்
கவலைகொள்ளறேனே

நலங்கு.

ஆதிதாளம் ... மத்யமாவதி

வாரும் வாரும் வைகுண்டவாசியே நீர்வாரும்
உம்மைக்காணுமல் அலைகுறேன் என்கவலையைத்தீரும்,
வைடூர்யத்தாலிழைத்த மாணிக்கப்பதக்கம் சாமி
மாரில்விளங்கிடவே என் மின்னே வாரும்,
ருக்மணீப்ராணேசா ரவிகுலசோமசாமி
கண்ணனேநீருமிப்போ கடிகி ஓடிவாரும்,
எறும்புஎண்ணங்குகோடி-ஏழைஜாதிகள்க்கெல்லாம்சாமி
ஈசா நீர் எந்தன்முன்னே இம்பமாய்வாரும்,
தேவகி பெற்றெடுத்த செல்வகுமாரா சாமி
கம்ஸனை வதைசெய்த கர்த்தனே வாரும்
ஆனைவினைதீர்த்த ஆதிபரம்ஜோதி
மான்பின்னலோடின மாதவா வாரும்,
கோபியர்வீட்டிலெ வெண்ணெ பால் தயிரைசாமி
கட்டுக்குடித்தெரு கோபாலா வாரும்
அஞ்சுவபதுடைய அதிபால த்ருவர்க்குசாமி

ஆனந்தமாய் வரங்குடுத்த ஆண்டவனேவாரும்,
பஞ்சவர் பத்தினிக்கி மாளாத துகிலேசாமி
பிரியமாகக்கொடுத்துநின்ற பிர்மமெவாரும்
மந்திரபர்வதத்தை மத்தாகவைத்துடனேசாமி
ஆமைவடிவுகொண்ட அரியே நீர் வாரும்,
தாடகியை சம்ஹரித்து விஸ்வாமித்திரமுனியின்சாமி
யாகத்தை நிறவேத்தின ரகுபதியேவாரும்,
ராவணன் ரதந்தன்னை தடுத்து யுத்தஞ்செய்தசாமி
ஜடாயுவுக்கு மோக்ஷம் ஈத்த ஜகல்பதியேவாரும்
மரத்தினடியில் நின்ற மறைந்த வாலியை
அம்பெய்து முக்திகொடுத்த அச்சுதாவாரும்,
தெசமுகந்தனைவதைத்து சீதா தேவியை சாமி
சிறையிலிருந்தெடுத்த ஸ்ரீதராவாரும்,
ரிஷியின் ஆச்சிர்மந்தன்னை நித்யம் சுத்திசெய்த சாமி
சபரிக்கிபதமளித்த தயாநிதியே வாரும்,
இத்தனைகால்மாய்ஞான் இஷ்டமாய்பஜித்தும் சாமி
ஈசா எந்தன்மேலின்னம் இரக்கம்வல்லயோ

பல்லவி

நவரசாரகம்] [திஸ்றஜாதி ஏகதாளம்
எங்கும் நிறைந்தவொரு ஏகாந்தரூபர்
ஈரேழுலோகமெல்லாம் அளந்தவொரு சூரா

தேவர்களெல்லாம் வருந்த ஜகந்தன்னிலேவந்து
வசுதேவர் தேவகிக்கி மைந்தராய்புறந்தீர் (லாலி)
கோகுலத்தில் வளந்தமொரு கோபாலகிருஷ்ணன்
கோபியர்கள் சேலையெல்லாம் கொண்டொளித்தவீரன்
சிசுபாலன் கம்சனையும் சதைத்தெறிந்த தீரன்
பக்தர்களை காத்தமொரு பரப்பிரம்மரூபர் (லாலி)
ருக்மணீதேவியை கல்யாணம்பண்ணி
ருக்மணியுடசிரசை அஞ்சுமுடியாக்கிவைத்து
சீக்சிரமாய் ரதத்திலேறி தேகமெங்கும்புகழ்
துவாரகயில் வந்துதித்தார் சத்வகுணராஜர் (லாலி)
பதினாறாயிரத்தெட்டு பெண்களெல்லாரேன்
பாணிக்கிரகணஞ்செய்த பார்த்தசாரதியே
அன்புடனெல்லாவர்க்கும் லீலைகள்செய்து
அழகாக வசிக்கின்ற அம்புஜநயனா (லாலி)

கிளிப்பாடல்

த்வாரகாபுரந்தன்னில் கிளியே
ஸச்சிதானந்தகிருஷ்ணன்
தன்மயமாகியவர் கிளியெ
சந்தோஷமாயிருப்பார்
வேதமயமாகின கிளியெ
விஷ்ணுகோபாலரும்

பருவிதமாய்பஜித்தால் கிளியே
விவேகம் வருமடியோ.
உள்ளிலும் வெளியிலும் கிளியே
ஒருபோல் நிறைத்திருக்கும்
உய்யாரனை நினைந்தால் கிளியே
துன்பங்கள் தீருமடி.
மூன்றுகுணங்களற்ற கிளியே
முகுந்தரை நம்பினக்கால்
முனிவர்க்கும் கிட்டாத கிளியே
முக்திகிடைக்குமடி.
ராகத்வேஷாதிகளை கிளியே
நாம் நினையாதிருந்தால்
நாராயணர் நமக்கு கிளியே
நம்மைதருவாரெடி.
தேஹாபிமானமற்ற கிளியே
ஸ்ரீதரனை நினைந்தால்
சீக்கிரமாய்நமக்கு கிளியே
ஜன்மம் சாபல்யமாகும்.
கட்டையிருக்கும்போது கிளியே
கர்மம்செய்யாதிருந்தால்
கருணைகடாக்ஷர் நம்மை கிளியே

காத்திடுவாரடியோ.

மோகத்தை நம்பாமல் கிளியெ

முகுந்தரை நீபஜித்தால்

தாகம்பசிகளற்று கிளியெ

சலிப்புமிருக்காதடி.

தனதான்யங்களும் கிளியெ

சம்பத்தும் ஏதுக்கடி

ஸச்சிதானந்தர்மேலெ கிளியெ

நெனவுவேணமடி

காயத்தை நம்பாதெ கிளியெ

கர்ம்மம்துலையாதெடி

பரப்பிர்மத்தை நினைந்தால் கிளியெ

பாபங்கள் தீருமடி.

கர்த்தனை நாம்பஜித்தால் கிளியெ

கஷ்டங்கள் வராதடி

காலன் கய்யில்க்கொடாமல் கிளியெ

காப்பாற்றிடுவாரடி.

நசுற்றதேகத்தின்மேலெ கிளியெ

நாம் இச்சைவைத்திருந்தால்

நரசிம்ஹரூபர்வா் கிளியெ

நம்மைநினைக்கமாட்டார்.

மாயப்றபஞ்சத்திலெ கிளியெ
மயங்கியெநாமிருந்தால்
மாதவனுரும் நம்மை கிளியெ
மறந்திடுவாரடியோ.
திருட்டுத்தனஞ்செய்யாமல் கிளியெ
சத்தியமாய்நடந்தால்
ஸ்ரீ அரிமனமகிழ்ந்து கிளியெ
சீக்கிரம் சேர்ப்பாரடி.
ஆதியந்தமும் அற்ற கிளியெ
ஆனந்தர் நாமத்தயும்
அனுதினமுஞ்சொன்னால் கிளியெ
அம்பாகத்தானழைப்பார்.
நாமென்னும் நம்மதென்னும் கிளியெ
அபிமானம் இல்லாமல்
நலமுடனெயிருந்தால் கிளியெ
நாதனுங்காத்திடுவார்.
வாக்குக்கும் மனதுக்கும் கிளியெ
எட்டாத ஈசனடி
அவர்மாய்கை அறியாமல் கிளியெ
மதிமோசம் போனேமடி.
சக்தியெசொருபாடி கிளியெ

ஆத்மாதியுடையவரே (நா
ஆதிகளைத்தீர்த்தருளும் (நா
ஆனந்தசயனா சரணம் (நா
கோகுலத்தில் வளர்த்ததொரு (நா
கோவிந்தனேசரணம் (நா
வசுதேவர் தேவகிக்கி (நா
மைந்தரேநாஞ்சரணம் (நா
வெண்ணைபால் தயிருண்ட (நா
விமலரேநாஞ்சரணம் (நா
ஆதியந்தங்களற்ற (நா
ஆண்டவாநாஞ்சரணம் (நா
முக்குணங்களற்றதொரு (நா
முகுந்தரே நாஞ்சரணம் (நா
பக்தாள்க்கிறங்கின்ற (நா
பரஞ்சோதியேசரணம் (நா
காட்டுதீ உண்டதொரு (நா
கமலாக்ஷனே ச்ரணம் (நா
கோக்களை மேய்த்ததொரு (நா
கோபாலா நாஞ்சரணம் (நா
சத்துருஸம்ஹாரஞ்செய்யும் (நா
ஜகன்மிேத கான் சரணம் (நா

சித்தப்ரகாசமெடி
அறிவுயில்லாவிட்டால் கிளியெ
அவரடியில்ப்பணிந்தால்போரும்
வித்தைகள்கத்தாலும் கிளியெ
விவேகம்வராதடியோ
விமலரைப்பணிந்தால் கிளியெ
விரக்திவருமடியொ.
சுகதுக்கம் இரண்டையும் கிளியெ
சமமென்று நினைந்தால்
சுந்தரரூபர் நம்மை கிளியெ
சுருக்காகச்சேர்த்துகொள்வார்.
வாமனரூபங்கொண்டு கிளியெ
மண்ணையளந்தவொரு
வைகுண்டரைபஜித்தால் கிளியெ
வாராதுகல்மஷங்கள்.
க்ஞானவைராக்யத்தை கிளியெ
நன்றாகவேநினைத்தால்
நாகசயனர் நம்மை கிளியெ
நன்றாககார்த்திடுவார்.

நாராயணர்துதி.

ஆதிமூலப்பொருளே நாராயணா

பாபங்களைத்தீர்த்தருளும் (நா
பார்த்தசாரதியே சரணம் (நா
இண்டத்தை உண்டதொரு (நா
அம்புஜனே சரணமய்யா (நா
கமலனளலோதனனே (நா
கர்த்தனேநான் சரணம் (நா
நித்தியாநந்த லோலனே (நா
நிர்ம்மலா நான் சரணம் (நா
ஏழைக்கார்க்கின்ற (நா
ஈசனே சரணம்பய்யா (நா
அண்டபுவனமெல்லாம் (நா
அளந்தவரே சரணமய்யா (நா
வாக்குமனதுக்கெட்டாத (நா
மறுபொருளே சரணமய்யா (நா
ஏகவஸ்துவாய்ஜெகத்தில் (நா
நிறைந்தவரே சரணம் (நா
அண்டாண்டபுவனத்திற்கும் (நா
ஆதாரனே சரணம் (நா
பிர்ம்மாவைநாபிதன்னில் (நா
பெத்தவரேசரணமய்யா (நா
கர்ம்மாதி சூத்திரத்தை (நா

தரித்தவரேசரணம் (நா
பத்தவதாரம்எடுத்த (நா
பங்கஜாக்ஷாசரணம் (நா
துஷ்டர்களைஸம்ஹரித்த (நா
ஜோதிமயமேசரணம் (நா
கானஜலம்போல்ஜகத்தைத் (நா
கிரகித்தவரேசரணமய்யா (நா
ஜாக்கிரஸொப்நசுழுப்தியை (கஏ
தள்ளினவரேசரணம் (நா
தத்வங்களுக்கெல்லாம் (நா
சாக்ஷியேநான்சரணம் (நா
விராட்டுரூபமாயிருக்கும் (நா
விமலரேசரணமய்யா (நா
க்ஷீரசாகரம்தன்னில் (நா
சயித்தவரேசரணம் (நா
வைகுண்டம்தன்னில்வாழும் (நா
பாதனே ஞான்சரணம் (நா
இத்தனை நேரமாயி (நா
இம்புடன்நான்பஜிக்க (நா
மனமதும் எாங்கலயோ (நா
மாதவாஉந்தனுக்கு (நா

த்வாரகையில் இருந்து (நா
சந்தோஷமாயிஎழுந்தருளும் (நா
எழுந்தருளிவந்துமென்னை (நா
இஷ்டமாககாத்தருளும் (நா

குதிச்சுபாடல்

ராஜன் மகாராஜன் கிருஷ்ணன் ராஜன்வாழ்கவே
ராஜன்மகாத்வாரகதன்னில் நன்றாய்வாழ்கவே (ரா
கோகுலத்தில் வளந்தமொரு கோபாலகிருஷ்ணன்
குஞ்சரத்தின் வினையைதீர்த்த கோதண்டதீக்ஷன் ரா
ருக்மணிஸத்பபாமயுடன் கூடிவிளயாடி
எங்குமாகெநிறைந்தமொரு ஏகாந்தரூபன் ரா
முத்துரத்தினபூஷணங்கள் முகத்தில்சோபிக்க
மும்மூர்த்திக்கும்மேலானமொரு முகுந்தரல்லவோ (ரா
பிருந்தாவனம்தன்னிலவர் வேடிக்கையாக
தாண்டவங்கள் ஆடிநின்ற ராதாகிருஷ்ணரேடி
கா[illegible]மகுரோதமோகங்களை கனவில்நினையாமல்
கண்[illegible]ணனைநா[illegible]ம்பஜித்திருந்தால் காத்துகொள்வாரடி (ரா
அன[illegible]ந்தசயனரானவரை அனுதினம்நினைந்தால்
கெருடவா[illegible]கனம் ஏறிவந்து காக்ஷிதருவாரடி ரா

மங்களம்

[illegible]ன்ட ஜாகி

ஏகதாளம்] [பைரவிராகம்]

பிரளயகாலம்வந்து பார்முழுவனபரவும்போது
ஆலிலைமேல் பள்ளிகொண்ட அச்சுதர்க்கும்
அம்பிகாதேவியும் ஆக்ஞைகள்செய்துடனே
மும்மூர்த்தியாகவந்த முகுந்தருக்கு ஜயமங்களம்
நித்தியசுபமங்களம்
பார்க்கடலில்வந்துதித்து பதினாலுலோகமெல்லாம்
பிரபஞ்சசிருஷ்டி செய்துவைத்த பரப்பிர்ம்மருக்கு
பன்னகாசயனருக்கு பார்வதிசகோதரர்க்கு
பக்தாளை அனுக்கிரகிக்கும் பரம்ஜோதிக்கும்
அசுராளும் அமராளும் அமிர்தம்கடையும்போது
ஆதிரூபமோகினியாய் வந்தவர்க்கு
அமிர்தம்தன்னைஎடுத்து அன்புடனே பருமாறி
அந்தர்த்தியானமாய்மறைந்த அற்புதர்க்கு (ஜ
நித்தியானந்த லோலருக்கு நிர்ம்மலஸ்வரூபருக்கு
வேதமயமாய்விளங்கும் விமலருக்கு
ருக்மணீசமேதருக்கு சத்தியபாமைலோலருக்கு
ஏழையர்க்குஇறங்கும் இந்திரஜாலருக்கு (ஜ

இந்தபுஸ்தகம் வடக்கந்தறைகிருமடம் வி.எஸ். பாலாம்பாளால் இயற்றி வித்யாகல்பதருஅச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பெட்டன

இந்த வித்பாகல்ப்பதரு அச்சுக்கூடத்தில் விற்பனைக்கு தயாராயிருக்கும் பாட்டுபுஸ்தகங்கள்.

பக்தர்கள் ஸ்துதி	௦	௩	௦
ஜயதேவ பத்மாவதிசரித்திரம்	௦	௪	௦
லளிதாம்பாள் சோபனம்	௦	௨	௦
கல்யாணக்கும்மி	௦	௨	[illegible]
துருவசரித்திரக்கும்மி	௦	௨	௦
துரோபதை சரித்திரக்கும்மி	௦	௨	[illegible]
கல்ப்பாத்தி தேருப்பாட்டு	௦	௧	௦
கல்யாணசௌகந்திகம்சோபனம்	௦	௧	௦
அம்பரீஷசரித்திரம் சோபனம்	௦	௧	௦
கிராதம் சோபனப்பாட்டு	௦	௧	௦
கெருடகெர்வபங்கம்	௦	௧	
சாகுந்தளம் சோபனப் பாட்டு	௦	௧	[illegible]

மேல்விலாசம்,

வி—வெங்கடாசலசாஸ்திரிகள்

வித்பாகல்ப்பதரு அச்சுக்கூடம்

கல்ப்பாத்தி—பாலக்காடு

9A
6-109